**குருணாகல் மாநகர சபை**
**குருணாகல் மாவட்டம்**

------------------------------------------

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

2019 ஆம் ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2020 மே 12 ஆந் திகதி கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் அந்த நிதிக்கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் சுருக்கமான அறிக்கை 2020 ஜுலை 22 ஆந் திகதியும் விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2020 ஜுலை 30 ஆந் திகதியும் சபைக்கு அனுப்பி வைக்கப்பட்டது.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

எனது அறிக்கையின் முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படைப் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து குருணாகல் மாநகர சபையின் 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | முன்னைய வருடத்தில் கூடுதலாகக் கணக்கிடப்பட்டிருந்த மீளச் செலுத்தப்பட்ட சம்பளம் ரூபா. 15,602,242 இனை சீர் செய்வதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | கணக்கை சீர் செய்வதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டல் வேண்டும். | கணக்காய்வுடன் கலந்தாலோசித்து இதனை சீர் செய்வதெனக் குறிப்பிடுகிறேன். |
| (ஆ) | மீளாய்வாண்டின் நவம்பர் மற்றும் டிசம்பர் நீதிமன்றத் தண்டப் பணத்திற்கான குறித்த ஒதுக்கீடு மேற்கொள்ளப்படாதிருந்ததுடன், ஆவணங்களின் அடிப்படையில் மீளாய்வாண்டின் இறுதியில் பெற வேண்டிய நீதிமன்றத் தண்டப் பண மீதி ரூபா. 17,496,300 ஆக இருந்த போதும் இது நிதிக்கூற்றுக்களில் ரூபா. 16,367,850 எனக் குறிப்பிடப்பட்டிருந்தது. | சரியாக இனங்காணப்பட்டு கணக்கிடப்படல் வேண்டும். | 2020 ஆம் ஆண்டிலிருந்து நவம்பர் மற்றும் டிசம்பர் மாதங்களுக்கான நீதிமன்றத் தண்டப் பணத்தை மதிப்பீடு செய்து நிலுவை வருமானங்களை சரியான முறையில் இறுதிக் கணக்குகளில் உள்ளடக்குமாறு விடயப் பொறுப்பு உத்தியோகத்தர்யைப் பணித்துள்ளேன். |
| (இ) | மீளாய்வாண்டின் இறுதியில் நிலுவை கடை வாடகையினுள் மற்றும் குறித்த கணக்குகளில் ரூபா. 301,492 ஆகவிருந்த தண்டப்பணம் மற்றும் ரூபா. 525,000 ஆகவிருந்த | வருமானப் பெறுகைகள் சரியாக இனங்காணப்பட்டு குறித்த | பின்னர் பதில் அளிப்பேன். |

| | | | |
|---|---|---|---|
| | சேவைக் கட்டணமும் உள்ளடங்கியிருந்ததன் காரணமாக நடைமுறைச் சொத்துக்கள் மற்றும் வருடத்திற்கான மேலதிகம் ரூபா. 826,492 இனால் கூடுதலாக நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டிருந்தது. | கணக்குகளில் பதியப்படுவதற்கான நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். | |
| (ஈ) | மீளாய்வாண்டிற்கான நிதிக்கூற்றுக்களில் முத்திரைக் கட்டணத்திற்கான குறித்த ஒதுக்கீடு மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | வருடத்திற்கு உரித்தான வருமானங்கள் இனங்காணப்பட்டு கணக்கிடப்படல் வேண்டும். | இவ்வருடம் தொடக்கம் சீர் செய்வதற்கான அறிவுறுத்தல் வழங்கப்பட்டது. |
| (உ) | மீளாய்வாண்டிற்கான நீர் வருமான பட்டியலிடல் ரூபா. 118,598,186 ஆகவிருந்த போதும், நிதிக்கூற்றுக்களில் இது ரூபா. 120,246,151 எனக் காட்டப்பட்டிருந்தது. | ஆவணங்களின் அடிப்படையில் சரியாக இனங்காணப்பட்டு கணக்கிடப்படுவதற்கான நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். | இது கணக்குகளின் மூலம் சீர் செய்யப்படுவதற்கான நடவடிக்கை எடுக்கப்படும். |
| (ஊ) | ஊழியர் கடன் ஆவணங்களின் அடிப்படையில் மீளாய்வாண்டின் இறுதியில் அறவிடப்பட வேண்டிய ஊழியர் கடன் நிலுவை ரூபா. 43,809,580 ஆகவிருந்த போதும் இது நிதிக்கூற்றுக்களில் ரூபா. 45,235,765 எனக் குறிப்பிடப்பட்டிருந்தமையினால் ஊழியர் கடன் ரூபா. 1,426,185 கூடுதலாக கணக்கிடப்பட்டிருந்தது. | ஊழியர் கடன் ஆவணங்களை முறையாக நாளதுவரையாக்கல் செய்து சரியான பெறுமதிகளை கணக்கிடுவதற்கான நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். | ஊழியர் கடன் கணக்கில் காட்டப்பட்டுள்ள வித்தியாசங்களை உடனடியாக சீர் செய்வதெனக் குறிப்பிடுகிறேன். |
| (எ) | மீளாய்வாண்டில் கொள்வனவு செய்யப்பட்ட ஆயுதப் பொருட்கள் மற்றும் உபகரணங்கள் ரூபா. 651,866 ஆகவிருந்த போதும், அது கணக்கில் ரூபா. 32,361,601 என வரவு வைக்கப்பட்டதன் காரணமாக ஆயுதப் பொருட்கள் மற்றும் உபகரணங்கள் ரூபா. 31,709,735 கூடுதலாக கணக்கிடப்பட்டிருந்தது. | வருடத்திற்கான கொள்வனவுகள் சரியாக இனங்காணப்பட்டு கணக்கிடப்படுவதற்கான நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். | இவ்வாறான தவறுகள் எதிர்காலத்தில் ஏற்படாதிருப்பதற்கான அறிவுறுத்தல்கள் உத்தியோகத்தர்களுக்கு வழங்கப்பட்டன. |
| (ஏ) | மீளாய்வாண்டிற்கான மரத் தளபாடங்கள் மற்றும் பொருத்துக்கள் கொள்வனவு ரூபா. 9,467,915 ஆகவிருந்த போதும், அது கணக்கில் ரூபா. 18,666,315 என வரவு வைக்கப்பட்டதன் காரணமாக தளபாடங்கள் மற்றும் பொருத்துகைகள் ரூபா. 9,198,401 கூடுதலாக கணக்கிடப்பட்டிருந்தது. | வருடத்திற்கான கொள்வனவுகள் சரியாக இனங்காணப்பட்டு கணக்கிடப்படுவதற்கான நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். | நாட்குறிப்புப் பதிவுகளுக்கமைவாக மரத் தளபாட உபகரணங்கள் மீதி சரியாகக் கணக்கிடப்பட்டுள்ளன. எனினும் தவறான மீதியைக் கொண்ட ஒரு அட்டவணை இணைக்கப்பட்டுள்ளது. |

| | | | |
|---|---|---|---|
| (ஐ) | வேறு நிறுவனங்கள், நபர்களுக்கு வழங்குவதற்காக 2019ஆம் ஆண்டு கொள்வனவு செய்யப்பட்டிருந்த ரூபா. 1,049,823 பெறுமதியான உபகரணங்கள், நிலையான சொத்துக்களின் கீழ் உள்ளடக்கப்பட்டதன் காரணமாக நிலையான சொத்துக்கள் அப் பெறுமதியினால் கூடுதலாகக் கணக்கிடப்பட்டிருந்தது. | கொள்வனவு செய்யப்பட்டதன் நோக்கம் சரியாக இனங்காணப்பட்டு கணக்கிடுவதற்கான நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். | நாட்குறிப்புப் பதிவுகள் மூலமாக சீர் செய்யப்பட்டது. |
| (ஒ) | வாகன ஆவணத்தின் அடிப்படையில் மோட்டார் வாகனங்கள் மற்றும் இழு வண்டிகளின் பெறுமதி ரூபா. 268,571,194 ஆகவிருந்த போதும் நிதிக்கூற்றுக்களில் அப்பெறுமதி ரூபா. 176,121,735 எனக் குறிப்பிடப்பட்டிருந்ததன் காரணமாக நிலையான சொத்துக்கள் மற்றும் மூலதன முதலீட்டுக்கு வருமானத்தால் பங்களிப்புச் செய்யும் கணக்குகள் ரூபா. 92,449,459 குறைவாகக் காட்டப்பட்டிருந்தது. | குறித்த ஆவணங்களை முறையாக நாளதுவரையாக்கல் செய்து சரியான பெறுமதிகளை கணக்கிடுவதற்கான நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். | நகர சபைக்குச் சொந்தமான அனைத்து வாகனங்களினதும் கணக்கெடுப்பினை மேற்கொண்டு சரியான பெறுமதிகளை கணக்குகளில் பதிவிடுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றதென்பதனைக் குறிப்பிடுகின்றேன். |
| (ஓ) | தொகை ஆவணங்களின் அடிப்படையில் மீளாய்வாண்டின் இறுதியில் மின் களஞ்சியத் தொகை மீதி மற்றும் பொதுக் களஞ்சியத் தொகை மீதி முறையே ரூபா. 2,497,255 மற்றும் ரூபா. 34,811,262 ஆகவிருந்த போதும், நிதிக்கூற்றுக்களில் அம் மீதிகள் முறையே ரூபா. 2,185,791 மற்றும் 57,515,377 எனக் காட்டப்பட்டிருந்தது. | தொகை ஆவணங்களை நாளதுவரையாக்கல் செய்து இறுதி மீதிகளை சரியாகக் கணக்கிடுவதற்கான நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். | கணக்காய்வு பரிசோதனைக்கமைவாக குறித்த சீராக்கல்கள் மேற்கொள்ளப்படும். |
| (ஔ) | 02 கணக்குகளுடன் தொடர்பான நிதிக்கூற்றுக்களுடன் சமர்ப்பிக்கப்பட்டிருந்த அட்டவணைகள் மற்றும் குறித்த ஆவணங்களுக்கிடையில் ரூபா. 6,205,649 வித்தியாசம் காணப்பட்டது. | குறித்த மீதிகளின் வித்தியாசத்தினை ஒப்பிட்டு கணக்குகளை சீர் செய்வதற்கான நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். | நிதிக்கூற்று மீதியின் அடிப்படையில் அட்டவணை மீதிகளை சரி செய்வதற்கு உடனடியாக நடவடிக்கை எடுக்குமாறு விடயப் பொறுப்பு உத்தியோகத்தர்க்கு அறிவுறுத்தல் வழங்கியுள்ளேன். |
| (க) | நிதிக்கூற்றுகளுடன் சமர்ப்பிக்கப்பட்டுள்ள உப அட்டவணைகளின் அடிப்படையில் செலவினக் கடன் கொடுத்தோர் ஒதுக்கக் கழிவு ரூபா. 16,757,337 ஆகவிருந்த போதும், பொதுப் | சரியான கடன்கொடுத்தோர் பெறுமதிகளை இனங்கண்டு கணக்கிடுவதற்கான நடவடிக்கை | கடன்கொடுத்தோர் கழிவுகளை சீர் செய்வதற்கு நடவடிக்கை எடுக்குமாறு விடயப் பொறுப்பு உத்தியோகத்தர்க்கு |

| | | | |
|---|---|---|---|
| | பேரேட்டில் கடன் கொடுத்தோர் ஒதுக்கக் பதிவழிப்பாக செலவினக் கடன்கொடுத்தோர் கணக்கில் ரூபா. 15,176,444 வரவு வைக்கப்பட்டிருந்தது. | எடுக்கப்படல் வேண்டும். | அறிவுறுத்தல் வழங்கியுள்ளேன். |
| (கா) | 02 வருமானத் தலைப்புகள் தொடர்பில் வருமானப் பிரிவினால் வழங்கப்பட்ட தகவல்கள் மற்றும் நிதிக்கூற்றுகளுக்கிடையில் ரூபா. 2,546,638 வித்தியாசம் காணப்பட்டது. | குறித்த மீதிகளின் வித்தியாசத்தினை ஒப்பிட்டு கணக்குகளை சீர் செய்வதற்கான நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். | நிதிக்கூற்று மீதியின் அடிப்படையில் வருமானப் பிரிவினால் வழங்கப்பட்ட கழிவு அட்டவணையினை சீர் செய்வதற்கு அறிவுறுத்தல் வழங்கியுள்ளேன். |
| (கி) | பெறுமதி ரூபா. 1,041,343,319 ஆகவிருந்த 25 கணக்குத் தலைப்புகளுடன் தொடர்பான ஆவணங்கள், அட்டவணைகள், பொருட் தொகை மதிப்பீட்டு அறிக்கைகள் மற்றும் காலமீளாய்வுகள் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்ட கணக்கு மீதிகளை உறுதி செய்யும் ஆதாரங்கள் சமர்ப்பிக்கப்படல் வேண்டும். | குறித்த அட்டவணைகளை உடனடியாக கணக்காய்விற்குச் சமர்ப்பிப்பதற்கான அறிவுறுத்தல் வழங்கியுள்ளேன். |
| (கீ) | மீளாய்வாண்டின் இறுதியில் ரூபா. 280,834,516 ஆகவிருந்த கடன்பட்டோர் மீதிக்காக கால மீளாய்வுகள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | சபையின் வருமானச் சட்டம், உப விதிகள் மற்றும் ஒப்பந்தங்களின் அடிப்படையில் அறவிடுவதற்கான நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். | கடன்பட்டோர் கால மீளாய்வுகள் சரியாகத் தயாரிக்கப்பட்டு உடனடியாகக் கணக்காய்விற்காகச் சமர்ப்பிப்பதற்கான அறிவுறுத்தல் வழங்கியுள்ளேன் |
| (கு) | 2019 டிசம்பர் 31ஆம் திகதியன்று செலுத்த வேண்டிய மீதிகளின் பெறுமதி ரூபா. 481,833,463 ஆகவிருந்த போதும், அம் மீதி ஆவணங்கள் / அட்டவணைகளுடன் இணக்கமற்றிருந்ததுடன் அதற்கான காலபகுப்பாய்வு கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | கடன் மீதிகள் சீர் செய்யப்படுவதற்கான நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். | பின்னர் பதில் அளிப்பேன். |

**1.4 இணங்காமைகள்**

**1.4.1 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணங்காமை**

| | **சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு** | **இணங்காமைகள்** | **பரிந்துரை** | **கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை** |
|---|---|---|---|---|
| (அ) | இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் நிதிப் பிரமாணங்கள் | | | |
| | நிதிப் பிரமாணம் 1646 | குறித்த மாதாந்த சுருக்கம் மற்றும் நாளாந்த ஓட்டக் குறிப்புகள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படவில்லை. | நிதிப் பிரமாணங்களின் அடிப்படையில் செயற்படல் வேண்டும். | முறையாகப் பதிவதற்கான அறிவுறுத்தல்களை பணிக்குழுவிற்கு வழங்குவதுடன், நகரப் பொறியியலாளரின் மேற்பார்வையின் கீழ் தொழில்நுட்ப உத்தியோகத்தரினால் (இயந்திர) சாரதிகளுக்கான அறிவூட்டும் பொருத்தமான முறையான செயற்திட்டமொன்றும் பயிற்சி நிகழ்ச்சியொன்றும் ஏற்பாடு செய்யுமாறு கூறுகிளேன். |
| (ஆ) | பொது நிர்வாக சுற்றறிக்கை | | | |
| (i) | 2009 ஏப்ரல் 16 திகதிய 09/2009 இலக்க, 2009 ஜுன் 17 திகதிய 09/2009(1) இலக்க பொது நிர்வாக சுற்றறிக்கை மற்றும் 2017 ஏப்ரல் 19 திகதிய 3/2017 இலக்க பொது நிர்வாக சுற்றறிக்கைக் கடிதம் | சகல அரச நிறுவனங்களினதும் உத்தியோகத்தர்கள் தமது வருகை மற்றும் வெளியேறுதலை கைவிரல் அடையாள இயந்திரம் மூலம் உறுதிப்படுத்த வேண்டியிருந்த போதும், கணக்காளர் (வருமானம்) தவிர்ந்த சகல நிறைவேற்று உத்தியோகத்தர்கள் உள்ளடங்கலாக சில உத்தியோகத்தர்கள் தமது வருகை மற்றும் வெளியேறுதலை விரல் அடையாள இயந்திரம் | சுற்றறிக்கை பிரமாணங்களின் அடிப்படையில் அனைத்து உத்தியோகத்தர் களும் செயற்படல் வேண்டும். | NWP/KR/F/KMC/5/19/184/2 இலக்க கணக்காய்வுப் பரிசோதனையின் பின்னர் அலுவலக உத்தியோகத்தர்கள் நேர அடையாள இயந்திரத்தில் அடையாளமிட்டு வருவதுடன், சபைக்கு அருகிலுள்ள விடுதியில் தங்கியுள்ள நகர ஆணையாளர் எனும் வகையில் அலுவலக நிர்வாக நடவடிக்கைகளுக்கு மேலதிகமாக (மாநகர |

| | | | | |
|---|---|---|---|---|
| | | மூலம் அடையாளப்படுதியிருக்க வில்லை. | | சபைக் கட்டளைச் சட்டம் மற்றும் ஏனைய கட்டளைச் சட்டங்கள் மற்றும் பொதுச் சபையின் மூலமும் வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களின் அடிப்படையில்) செயற்பாட்டு மற்றும் மேற்பார்வை நடவடிக்கைகளில் கால வரையறையின்றி ஈடுபடுவதன் காரணமாக நேர அடையாளம் இடப்படவில்லை. |
| (ii) | 2009 ஏப்ரல் 16ஆம் திகதிய 09/2009 இலக்க அரச நிர்வாக சுற்றறிக்கையின் ivஆம் பிரிவு | விடுமுறைக் கால சம்பளம் மற்றும் மேலதிக வேலை நேரக் கொடுப்பனவு வழங்கும் போது வரவு மற்றும் வெளியேறுதல் நேரம் குறித்த கணினிப் பிரதி மூலம் உறுதிப்படுத்தப்படாது கொடுப்பனவுகள் வழங்கப்பட்டிருந்தன. | விரல் அடையாள கணினிப் பிரதி அடிப்படையில் வரவு மற்றும் வெளியேறுதலை அவதானித்து கொடுப்பனவு மேற்கொள்ளப்ப டல் வேண்டும். | வார இறுதி மற்றும் விடுமுறை தின கொடுப்பனவுகளை அனுமதிக்கும் போது குறித்த தினங்களில் செய்யப்பட வேண்டிய வேலைகள் பூர்த்தி செய்யப்பட்டுள்ளதை உறுதி செய்ததன் பின்னர் கொடுப்பனவுகளை அனுமதிக்காக சமர்ப்பிக்குமாறு உள்ளக சுற்றறிக்கை மூலம் நகர திணைக்களத் தலைவர்களை பணித்துள்ளேன். |
| (iii) | 2016 டிசம்பர் 29 ஆம் திகதிய 30/2016 இலக்க பொது நிர்வாக சுற்றறிக்கை | சபைக்குச் சொந்தமான வாகனங்களின் எரிபொருள் பாவனை பரிசோதனை மேற்கொள்ளப்பட்டிருக்க வில்லை. | சுற்றறிக்கை பிரமாணங்களின் பிரகாரம் செயற்படல் வேண்டும். | சபைக்குச் சொந்தமான வாகனங்களின் எரிபொருள் பரிசோதனையை ஒழுங்கான முறையில் மேற்கொள்ளுமாறு நகரப் பொருளியலாளருக்கு 2019 ஒக்டோபர் 22 ஆம் திகதிய கடிதம் மூலம் அறிவிக்கப்பட்டுள்ளது. மீண்டும் அது தொடர்பான ஒரு விசேட அறிவுறுத்தல் வழங்குவேன். |

## 1.5 போதிய அதிகாரத்தால் உறுதிப்படுத்தப்படாத கொடுக்கல் வாங்கல்கள்

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | மாநகர சபைகளின் திட்டமிடல் குழு கொடுப்பனவு ரூபா. 1,000 வழங்குவதற்காக வடமேல் மாகாண ஆளுனரின் அனுமதி கிடைத்திருந்த போதும், 2018 ஜுன் 05ஆம் திகதிய சபை தீர்மாணத்தின் பிரகாரம் திட்டமிடல் குழு உத்தியோகத்தர் ஒருவரின் ஒரு நாளைக்கான கொடுப்பனவு ரூபா. 2,000 வரை அதிகரிக்கப்பட்டிருந்தது. இதனடிப்படையில் 2019 ஆம் ஆண்டு ஜனவரி தொடக்கம் ஜுலை வரை 09 குழு உத்தியோகத்தர்களுக்கு ரூபா. 323,000 கூடுதலாக வழங்கப்பட்டிருந்தது. மேலும் அலுவலக உதவியாளர்களுக்கான கொடுப்பனவு ரூபா. 300 இலிருந்து ரூபா. 1,000 வரை அதிகப்படுத்தி வழங்கியிருந்தமை காரணமாக 2019 ஜுலை வரை ரூபா. 25,200 கூடுதலாக செலுத்தப்பட்டிருந்தது. | அனுமதிக்கப்பட்ட தொகைக்கு மேலதிகமாக சபையின் தீர்மாணத்தின் அடிப்படையில் கொடுப்பனவு வழங்கப்படக் கூடாது. | திட்டமிடல் குழு உறுப்பினர்கள், விடயப் பொறுப்பு உத்தியோகத்தர்கள் மற்றும் அலுவலக உதவியாளர்கள் உள்ளிட்டவர்களுக்காக திட்டமிடல் குழுவின் பரிந்துரையின் அடிப்படையில் பொதுச் சபையின் G.C(12) மற்றும் 2018 ஜுன் 05 திகதிய சபை அங்கீகாரத்தில் வழங்கப்பட்டுள்ள தீர்மாணத்தின் அடிப்படையில் கொடுப்பனவு வழங்கப்படும். இச் சபை அங்கீகாரத்தினைப் பெற்றுக்கொள்வதற்கான பரிந்துரை நகர அபிவிருத்தி அதிகார சபையின் திட்டமிடல் உத்தியோகத்தர் மற்றும் வீதி அபிவிருத்தி அதிகார சபையின் நிறைவேற்றுப் பொறியியலாளர் ஆகியோர் அடங்கிய குழுவின் இணக்கத்தின் பேரில் தீர்மாணிக்கப்பட்ட ஒன்றாகும். |
| (ஆ) | ரஜபிஹில்ல வாடி வீட்டின் மூலம் கடந்த வருடம் டிசம்பர் 31 ஆம் திகதி வரை அறவிடப்பட வேண்டியிருந்த நிலுவை ரூபா. 5,943,935 முறையான அனுமதியின்றி மீளாய்வாண்டின் நிதிக்கூற்றுக்களிலிருந்து நீக்கப்பட்டிருந்தது. | முறையான அனுமதியின்றி நிதிக்கூற்றுக்களிலிருந்து நீக்கப்படல் கூடாது. | மாவட்ட நீதிமன்றத்தில் 26/RE இலக்கத்தையுடைய ரஜபிஹில்ல வாடி வீடு தொடர்பான ஒரு வழக்கு காணப்படுகின்றது. இதனால் தற்பொழுது வருமானம் ஈட்டாத பயன்பாடற்ற ஒரு சொத்தாக இது காணப்படுகின்றது. |

## 02. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2019 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்காக சபையின் மீண்டுவரும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 305,279,341 ஆக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மீண்டெழும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 281,518,678 ஆக இருந்தது.

## 2.2 நிதிப் பராமரிப்பு

| கணக்காய்வு அவதானிப்பு | | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | மக்கள் வங்கியின் ஒரு நடைமுறைக் கணக்குடன் தொடர்பாக 2019 டிசம்பர் 31 ஆம் திகதி வழங்கப்பட்ட எனினும் கொடுப்பனவிற்காக சமர்ப்பிக்கப்படாத 06 மாதங்கள் கடந்த ரூபா. 216,704 பெறுமதியான 44 காசோலைகள் சம்பந்தமாக நிதிப் பிரமாணம் 396(ஈ) இன் பிரகாரம் செயற்பட்டிருக்கவில்லை. | நிதிப் பிரமாணங்களின் பிரகாரம் செயற்படல் வேண்டும். | 8645 இலக்க கணக்குடன் தொடர்பான 2019 டிசம்பர் 31 ஆம் திகதி வழங்கப்பட்ட எனினும் கொடுப்பனவிற்காக சமர்ப்பிக்கப்படாத காவோலைகள் இதுவரை ரூபா. 73,320 ஆகவுள்ளதுடன் 06 மாதங்கள் கடந்த காசோலையினை வருமானமாக எடுப்பதற்கு விடயப் பொறுப்பு உத்தியோகத்தர்க்கு அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளது. |
| (ஆ) | நிதிப் பிரமாணம் 260 இன் பிரகாரம் கொடுப்பனவைப் பெறுபவர்களின் ஆளடையாளம் உறுதி செய்யப்பட்டதன் பின்னர் கொடுப்பனவு மேற்கொள்ளப்பட வேண்டியிருந்த போதும் 04 வங்கிக் கணக்குகள் தொடர்பில் 23 சந்தர்ப்பங்களில் ரூபா. 138,540 இனங்காணப்படாத கொடுப்பனவுகளாக வங்கி இணக்கக் கூற்றுகளில் குறிப்பிடப்பட்டுள்ளது. | நிதிப் பிரமாணங்களின் பிரகாரம் செயற்படல் வேண்டும். | இனங்காணப்படாத கொடுப்பனவுகளில் கணக்குகளுக்கிடையில் நிதி மாற்றமடைதல் காரணமாக ஏற்பட்ட விடயங்களும் அடங்கியுள்ள அதேவேளை ஏனைய கொடுப்பனவுகளை உடனடியாக நீக்கிக்கொள்வதற்கு விடயப் பொறுப்பு உத்தியோகத்தர்க்கு அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளது. |
| (இ) | மீளாய்வாண்டின் இறுதியில் 03 வங்கிக் கணக்குகளுடன் தொடர்பான ரூபா. 2,147,129 பெறுமதியான 70 வைப்புக்களை இனங்காண்பதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்க வில்லை. | வைப்புக்களை இனங்கண்டு ஆவணப்படுத்து வதற்கான நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். | 06 மாதங்கள் கடந்த இனங்காணப்படாத வரவுகளை வருமானமாக எடுப்பதற்கு விடயப் பொறுப்பு உத்தியோகத்தர்க்கு அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளது. |

## 2.3 வருமான நிர்வாகம்

### 2.3.1 மதிப்பிடப்பட்ட வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டிற்குரியதாகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்த மதிப்பிடப்பட்ட வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

| | வருமானம் | 2019 மதிப்பிடப்பட்ட வருமானம் | 2019 சிட்டையிடப்பட்ட வருமானம் | 2019 சேகரிக்கப்பட்ட வருமானம் | 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறு மொத்த நிலுவை | 2018 மதிப்பிடப்பட்ட வருமானம் | 2018 சிட்டையிடப்பட்ட வருமானம் | 2018 சேகரிக்கப்பட்ட வருமானம் | 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறு மொத்த நிலுவை |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| (i) | வீதவரியும் வரியும் | 323,200,000 | 286,398,772 | 237,750,481 | 131,143,630 | 174,446,300 | 176,341,507 | 179,193,292 | 82,495,339 |
| (ii) | வாடகை | 74,331,560 | 65,895,321 | 69,980,934 | 8,134,218 | 76,455,955 | 70,803,420 | 74,722,664 | 12,219,831 |
| (iii) | அனுமதிப்பத்திர கட்டணங்கள் | 20,201,100 | 20,332,327 | 20,332,327 | - | 16,152,000 | 20,106,771 | 20,106,771 | - |
| (iv) | ஏனைய வருமானம் | 546,519,160 | 494,929,582 | 478,357,595 | 121,231,133 | 409,861,600 | 476,761,439 | 471,642,735 | 104,659,146 |
| | மொத்தம் | 964,251,820 | 867,556,002 | 806,421,337 | 260,508,981 | 676,915,855 | 744,013,137 | 745,665,462 | 199,374,316 |

### 2.3.2 வருமானம் ஈட்டலின் செயலாற்றுகை

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| முன்னைய வருடத்தின் டிசம்பர் 31 ஆம் திகதி ரூபா. 199 மில்லியன் ஆகவிருந்த நிலுவை வருமானம் மீளாய்வாண்டாகும் பொழுது ரூபா. 260 மில்லியனாக இருந்தது. | நிலுவை மீதிகளை அறவிடுவதற்கான நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். | கருத்து தெரிவிக்கப்படவில்லை. |

### 2.3.3 வரி மற்றும் வீதவரி

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| (அ) மீளாய்வாண்டில் 12 வரித் தொகுதிகள் தொடர்பாக பட்டியலிடப்பட்ட வருமானம் ரூபா. 158,782,386 ஆகவிருந்ததுடன், டிசம்பர் 31ஆம் திகதியன்று அறவிடப்பட வேண்டியவ ரி ரூபா. 70,138,502 ஆகவிருந்தது. | மாநகர சபைக் கட்டளைச் சட்டத்தின் விதிமுறைகளுக் கமைவாக செயற்பட்டு நிலுவை மீதிகளை அறவிடுவதற்கா ன நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். | அதிகமான வாடிக்கையாளர்கள் மதிப்பீட்டுப் பெறுமதியினை அதிகரித்தமைக்கு எதிர்ப்புத் தெரிவித்து கட்டணங்களைச் செலுத்தவில்லை. மதிப்பீட்டு எதிர்ப்பு பரிசீலனைகள் 2019 மார்ச் 25ஆம் திகதி முதல் 2019 ஜுலை 02 ஆம் திகதி வரை நடாத்தப்பட்டுள்ளன. அச் சொத்துக்கள் தொடர்பான திருத்தியமைக்கப்பட்ட அறிக்கைகள் 2019 ஆகஸ்ட் 06ஆம் திகதி முதல் எமக்குக் |

| | | | |
|---|---|---|---|
| | | | கிடைக்கப்பெற்று வரவு செலவு பதியப்படுவதன் மூலம் ஆரம்ப மதிப்பீட்டுப் பெறுமதியை குறைப்பதன் மூலமும் முன்னர் குறிப்பிட்ட வருமானம் குறைந்துள்ளது. இப் பரிசீலனைகளுடன் தொடர்பான நடவடிக்கைகள் 2019 மூன்றாவது காலாண்டு இறுதி வரை செயற்படுத்துவதன் மூலம் இவ் வருமானத்தை வருடத்தினுள் ஈட்டுவதற்கு முடியாமல் போயிருந்தது. |
| (ஆ) | மீளாய்வாண்டின் இறுதியில் நிலுவை நீர் வருமானம் ரூபா. 61,005,128 ஆகவிருந்ததுடன் இதில் ரூபா. 100,000 இற்கு அதிகமான நிலுவை காணப்பட்ட 27 பாவனையாளர் களின் ரூபா. 13,538,490 நிலுவை காணப்பட்டது. | ஒப்பந்தத்தின் அடிப்படையில் செயற்பட்டு நிலுவை மீதிகளை அறவிடுவதற்கான நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். | நிலுவைகளை அறவிடுவதற்கான இறுதி அறிவித்தல் வழங்கப்பட்டுள்ளதுடன் நீர் வெட்டுக்காக வழங்கப்பட்டுக்கொண்டிருக் கிறது. |

**2.3.4 வாடகை**

--------------

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டின் இறுதியில் அறவிடப்பட வேண்டிய அதிஷ்ட லாபச் சீட்டு கூட வாடகை மற்றும் உல்லாசப் பயணிகள் வாடகை வருமானம் ஆகியவற்றின் கூட்டுத்தொகை ரூபா. 3,230,060 ஆகவிருந்ததுடன் 2020 ஜுன் 30ஆம் திகதியன்று மேலும் அறவிடப்பட வேண்டிய நிலுவை ரூபா. 3,083,738 ஆகவிருந்தது. | ஒப்பந்தத்தின் பிரகாரம் குறித்த வாடகை அறவிடப்படல் வேண்டும். | 2019 டிசம்பர் 31ஆம் திகதியன்று காணப்பட்ட அதிஷ்ட லாபச் சீட்டு கூட வாடகை மற்றும் உல்லாசப் பயணிகள் வாடகை நிலுவையில் 2020 ஜுன் 31ஆம் திகதியன்று ரூபா. 146,322 அறவிடப்பட்டுள்ளது. |
| (ஆ) | மீளாய்வாண்டின் இறுதியில் குருணாகல் புதிய கடைத் தொகுதியின் 63 கடைகள் தொடர்பிலான ரூபா. 1,004,722 கடை வாடகை மற்றும் 64 கடைகள் தொடர்பிலான ரூபா. 520,368 சேவைக் கட்டணம் நிலுவையாகக் காணப்பட்டது. | ஒப்பந்தத்தின் பிரகாரம் மாதாந்த வாடகையை குறித்த தினத்தில் அறவிடுவதற்கான நடவடிக்கை | குருணாகல் புதிய கடைத் தொகுதியிலுள்ள மற்றும் ஏனைய கடைகள் தொடர்பான நிலுவை வாடகைகள் தற்பொழுது அறவிடப்பட்டு வருவதுடன் அவ்வாறு செலுத்தாத கடைகள் |

| | | | |
|---|---|---|---|
| | | எடுப்பதுடன், நிலுவை மீதிகள் சம்பந்தமாக ஒப்பந்தத்தின் அடிப்படையில் செயற்படல் வேண்டும். | முத்திரையிடப்பட்டுள்ளதுடன் வழக்குத் தொடர்வதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. |
| (இ) | குருனாகல் பஸ் தரிப்பிடக் கடைகள் 62 இல் மீளாய்வாண்டின் இறுதியில் அறவிடப்பட வேண்டிய வாடகை நிலுவை ரூபா. 902,988 ஆகவிருந்தது. | ஒப்பந்தத்தின் பிரகாரம் மாதாந்த வாடகையை குறித்த தினத்தில் அறவிடுவதற்கான நடவடிக்கை எடுப்பதுடன், நிலுவை மீதிகள் சம்பந்தமாக ஒப்பந்தத்தின் அடிப்படையில் செயற்படல் வேண்டம். | குருணாகல் பஸ் தரிப்பிடக் கடைத் தொகுதியிலுள்ள கடைகள் தொடர்பான நிலுவை வாடகைகள் தற்பொழுது அறவிடப்பட்டு வருவதுடன் அவ்வாறு செலுத்தாத கடைகள் முத்திரையிடப்பட்டுள்ளதுடன் வழக்குத் தொடர்வதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. |
| (ஈ) | மீளாய்வுாண்டின் இறுதியில் ரன்தலிய வாடி வீடு வாடகைக்கு விடப்பட்டதன் மூலம் அறவிடப்பட வேண்டிய வாடகை ரூபா. 511,875 ஆகவிருந்தது. | ஒப்பந்தத்தின் பிரகாரம் வாடகை அறவிடுவதற்கான நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். | ரன்தலிய வாடி வீட்டிற்காக அறவிடப்பட வேண்டிய வாடகை தொடர்பாக ஏற்கனவே எழுத்து மூலம் அறிவிக்கப்பட்டுள்ளது. |
| (உ) | மீளாய்வாண்டின் இறுதியில் ரூபா. 1,546,769 ஆகவிருந்த பொதுச் சந்தை மற்றும் ஏனைய கடை வாடகை மீதி அறவிடப்படுவதற்குத் தேவையான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | ஒப்பந்தத்தின் பிரகாரம் மாதாந்த வாடகையை குறித்த தினத்தில் அறவிடுவதற்கான நடவடிக்கை எடுப்பதுடன், நிலுவை மீதிகள் சம்பந்தமாக ஒப்பந்தத்தின் அடிப்படையில் செயற்படல் வேண்டும். | பொதுச் சந்தை மற்றும் ஏனைய கடை வாடகை மீதி தற்பொழுது அறவிடப்பட்டு வருவதுடன் அவ்வாறு செலுத்தாத கடைகள் முத்திரையிடப்பட்டுள்ளதுடன் வழக்குத் தொடர்வதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. |

### 2.3.5 நீதிமன்றத் தண்டப்பணம் மற்றும் முத்திரைக் கட்டணம்

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டிள் இறுதியில் மாகாண சபையின் பிரதான செயலாளர் மற்றும் ஏனைய உத்தியோகத்தர்களிடமிருந்து ரூபா. 17,496,300 நீதிமன்றத் தண்டப் பணம் அறவிடப்பட வேண்டியிருந்ததுடன், இதில் முன்னைய வருடங்களுடன் தொடர்பான ரூபா. 10,509,850 தொகையும் அடங்கியிருந்தது. | நீதிமன்றத் தண்டப் பணம் முறையாகக் கணக்கிடப்பட்டு அறவிடப்படல் வேண்டும். | மாகாண சபையின் பிரதான செயலாளரின் மூலம் ரூபா. 17,496,300 நீதிமன்றத் தண்டப் பணமாக 081008 இலக்கமும் 2020 ஜுன் 16ஆம் திகதியும் கொண்ட காசோலை மூலம் பெறப்பட்டது. |
| (ஆ) | மாகாண சபையின் பிரதான செயலாளர் மற்றும் ஏனைய உத்தியோகத்தர்களிடமிருந்து மீளாய்வாண்டிள் இறுதியில் அறவிடப்பட வேண்டியிருந்த முத்திரைக் கட்டண மீதி ரூபா. 37,566,888 ஆகவிருந்தது. | நிலுவை முத்திரைக் கட்டணம் அறவிடப்படல் வேண்டும். | 2020 ஜுலை 13ஆம் திகதி பிரதான செயலாளரின் மூலம் முத்திரைக் கட்டணமாக ரூபா. 3,774,8357 தொகை பெறப்பட்டது. |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 செயலாற்றல்

மாநகர சபைகள் சட்டத்தின் 4 ஆவது பிரிவின் கீழ் பொதுமக்கள் சுகாதாரம், பொது பயன்பாட்டுச் சேவைகள் மற்றும் பொது வீதிகள் தொடர்பான விடயங்களை முறைப்படுத்தல் மற்றும் நிர்வகித்தல், பொதுமக்களின் பொழுதுபோக்கு வசதிகள் மற்றும் நலன்புரி போன்ற சபையினால் நிறைவேற்ற வேண்டியிருந்த குறிக்கோள்களை நிறைவேற்றுதல் தொடர்பாக வெளிப்படுத்தப்பட்ட விடயங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

#### (அ) உப விதிகள்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மாநகரசபை கட்டளைச் சட்டத்தின் 272 பிரிவின் கீழ் 32 பிரதான காரியங்களை செயற்படுத்துவதற்காக உப விதிகள் அமுல்படுத்தப்பட வேண்டியிருந்ததன் காரணமாக 2019 டிசம்பர் 31 ஆம் திகதி அளவில் 541/17 இலக்க 1989 ஜனவரி 20 ஆம் திகதிய நிறைவேற்றப்பட்ட உப விதி 2015 ஜுலை 24 ஆம் திகதி பின்பற்றப்பட்டிருந்தது. அதற்கு மேலதிகமாக சபையின் தேவைக்கு | அங்கீகரிக்கப்பட்ட உப விதிகளின் அடிப்படையில் செயற்படுவதற்கும் சபையின் தேவைக்கு ஏற்றவாறு புதிய உப விதிகளை இயற்றுவதற்கும் நடவடிக்கை எடுத்தல் | உள்ளூராட்சி ஆணையாளரின் அனுமதிக்காக அனுப்பப்பட்ட 08 உப விதிகளுக்கான அனுமதி இதுவரையில் கிடைக்காத அதேவேளை இது தொடர்பாக மீண்டும் நினைவுபடுத்துவதற்கும் உருவாக்குவதற்குத் |

| | | |
|---|---|---|
| ஏற்ற விதத்தில் 2016ஆம் ஆண்டு 08 உப விதிகள் வர்த்தமாணியில் வெளியிடப்பட்டிருந்ததுடன், 2013 மற்றும் 2014 வருடங்களில் 08 உப விதிகள் அமைக்கப்பட்டு உள்ளூராட்சி ஆணையாளருக்கு வழங்கப்பட்டிருந்தன. மேலும், குருணாகல் குளச் சுற்றில் புகைப்படம் எடுப்பதற்காக கட்டணம் அறவிடப்படும் என விளம்பரப்படுத்தப்பட்டிருந்த போதும், அது தொடர்பான ஒரு உப விதி இயற்றுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | வேண்டும். | திட்டமிடப்பட்டுள்ள உப விதிகள் அனைத்தையும் அனுமதிக்காக அனுப்புவதற்கும் தேவையான நடவடிக்கைகள் நகர சட்டத் திணைக்களத்தினால் மேற்கொள்ளப்படுவதற்குத் திட்டமிடப்பட்டுள்ளது. |

**(ஆ) மதிப்பீடு செய்யப்பட்ட திட்டங்கள் மேற்கொள்ளப்படாமை**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டிற்காக ரூபா. 20,550,000 பெறுமதியான 52 திட்டங்களுக்கான மதிப்பீடு செய்யப்பட்டிருந்த போதும் இவற்றில் 12 திட்டங்கள் மாத்திரமே நிறைவேற்றப்பட்டிருந்தன. | பொதுமக்கள் ஆலோசனைகளின் அடிப்படையில் தயாரிக்கப்படுகின்ற வரவு செலவுத் திட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள திட்டங்களை செயற்படுத்தி பொது மக்களுக்கான சேவைகளை மேற்கொள்ள நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | நகரப் பொறியியலாளர் மற்றும் நகரக் கணக்காளர் ஆகியோருடன் கலந்தாலோசித்து பின்னர் பதிலொன்றை முன்வைப்பேன். |

**(இ) திண்மக்கழிவுப்பொருள் முகாமைத்துவம்**

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (i) | குருணாகல் மாநகர சபையின் திண்மக் கழிவு முகாமைத்துவ நிலையம் ஆவேனியாவ வனப் பாதுகாப்புப் பிரதேசத்திற்குச் சொந்தமான ஒரு காணியில் அமைந்துள்ளதுடன், வகை பிரிக்கப்படாது சேகரிக்கப்படுகின்ற கழிவுகள் திறந்த பூமியில் கொட்டப்படுவதன் மூலம் 45 – 50 அடி உயரமான, அடிக்கடி | கழிவு முகாமைத்துவத்தினை முறையாக மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | நகர அதிகாரப் பிரதேசத்திற்கு அண்மையில் கழிவு நிலையத்திற்குப் பொருத்தமான வேறொரு மாற்று இடத்தினை பெற்றுக்கொள்வது மிகவும் சிரமமான ஒரு காரியமாகும். இயற்கையாக உள்ள காட்டுத் தீயினைத் தடுத்தல் மற்றும் கட்டுப்படுத்துவதற்காக நகர தீயணைப்புப் பிரிவினருக்கு |

| | | | |
|---|---|---|---|
| | தீப்பற்றி எரியக்கூடிய கழிவு மலையொன்று உருவாகியுள்ளதுடன் சுற்றாடல் அனுமதிப்பத்திரம் பெறுவதற்கான நடவடிக்கையும் எடுக்கப்பட்டிருக்க வில்லை. | | தேவையான மனித வளம் மற்றும் உபகரணங்கள் வழங்கப்பட்டுள்ளதுடன் 24 மணி நேரமும் தயார் நிலையில் வைக்கப்பட்டுள்ளனர். |
| (ii) | மின்னணுக் கழிவுகள் மற்றும் மருத்துவக் கழிவுகளை அகற்றுவதற்கான முறையான செயன்முறையொன்று பின்பற்றப்பட்டிருக்கவில்லை. | கழிவு அகற்றலை முறைப்படுத்துவதற்கு நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் | மின்னணுக் கழிவுகளை அகற்றும் நிலையத்திற்காக எரி ஆலையொன்றினை அமைப்பதற்கு தேவையான திட்டம் தயாரிக்கப்பட்டுள்ளதுடன் அது அமைக்கப்பட்டதன் பின்னர் இப் பிரச்சினைக்கான தீர்வு கிட்டும்.<br>மருத்துவக் கழிவுகளில் பம்பஸ், கோஸ் ஆகிய பகுதிகள் நிலையத்தினுள் சுகாதார முறைகள் பின்பற்றப்பட்டு புதைக்கப்படுகின்றன. |

**(ஈ) சுற்றாடல் சார்ந்த பிரச்சினைகள்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மலக் கழிவுகளை கழிவு மலையின் மீது அமைந்துள்ள திறந்த வெளியில் அகற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது. | சுற்றாடல் தொகுதிக்கு ஏற்படும் தாக்கம் குறைகின்ற வகையில் கழிவகற்றலை முறையாக மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும் | மாநகர சபையின் மலக் கழிவகற்றல் சுத்திகரிப்புத் தொகுதிக்கு கிடைக்கப்பெறுகின்ற கழிவுகளின் அளவு கொள்ளளவைத் தாண்டும் அபாயத்தில் இருப்பதன் காரணமாக மாற்றீட்டு நடவடிக்கையாக குருணாகல் கழிவு நீர்த் திட்டத்திற்கு அனுப்புவதற்கு தீர்மாணிக்கப்பட்டுள்ளது. |

**(உ) நிலையான அபிவிருத்தி இலக்குகள்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| ''நிலையான அபிவிருத்தி நிகழ்ச்சி நிரல் 2030'' தொடர்பாக சபை அறிந்திருந்ததுடன், 06 நிலைபேறான அபிவிருத்தி இலக்குகளை அடைந்து | நிலையான அபிவிருத்தி இலக்கு மற்றும் நோக்கங்களின் அடிப்படையில் வருடாந்த வரவு | அனைத்து நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்கள் மற்றும் இலக்குகள் உள்ளடங்கும் வகையில் சபையினால் செயற்திட்டங்கள் |

| | | | |
|---|---|---|---|
| | கொள்வதற்காக மீளாய்வாண்டினுள் பல்வேறு செயற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டிருந்தன. | செலவுத் திட்டத்தினைத் தயாரித்து செயற்படுத்துவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளதுடன், 2021 வரவு செலவுத் திட்டத்திலும் நோக்கங்கள் மற்றும் இலக்குகள் மேலும் வலுப்படுத்தப்படும் வகையில் மதிப்பீடு தயாரிக்கும் சந்தர்ப்பத்தில் அதிக கவனம் செலுத்துவேன். |

**3.2 முகாமைத்துவ செயற்திறனின்மை**

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (i) | குருணாகல் பஸ் தரிப்பு நிலையத்தில் மதிப்பீட்டுப் பெறுமதி ரூபா. 14,232,000 ஆகவிருந்த 18 கடைகளை நிர்மாணிப்பதற்கு நகர முதல்வரினால் நேரடியாக ஆளுனரிடம் அனுமதி பெறப்பட்டு கடைகள் பெற்றுத் தருமாறு கோரிய விண்ணப்பதாரிகளுக்கு விலைமனுக் கோரல் விதிமுறைகளுக்குப் புறம்பாக வழங்கப்பட்டிருந்தன. | பெறுகைகள் வழிகாட்டிக் கோவையின் விதிமுறைகளுக்கு அமைவாக குறித்த விளம்பரங்களை பிரசுரித்து போட்டி அடிப்படையிலான விலைகளின் அடிப்படையில் பெற்றுக்கொடுப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | வடமேல் மாகாண ஆளுனரின் செயலாளரின் NWP/GOV/AD/08/44/1/1 – ii சுற்றறிக்கை மற்றும் 2019.10.14 திகதிய கடிதத்தின் பந்தி 03இல் ''முறையான திட்டத்தின் அடிப்படையில் கடைகளை நிர்மாணித்தல் தொடர்பாக நடவடிக்கை எடுக்குமாறும் முறையான ஒப்பந்தத்தின் அடிப்படையில் கடைகளை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்குமாறும் கௌரவ ஆளுனர் அவர்களால் வேண்டப்பட்டுள்ளதாக'' குறிப்பிடப்பட்டுள்ளது.<br>வடமேல் மாகாண கௌரவ ஆளுனர் அவர்களினால் அனுமதிக்கப்பட்டு வழங்கப்பட்ட ஆவணத்தில் குறிப்பிடப்பட்டுள்ள நபர்களுக்கு வாடகை அடிப்படையில் கடைகள் வழங்கப்பட்டன. |
| (ii) | பஸ் தரிப்பு நிலையத்தினுள் அமானோ தகட்டினைப் பயன்படுத்தி சட்ட விரோத நிர்மாணங்கள் மேற்கொள்ளப்பட்டிருந்த போதும் அது தொடர்பாக 2020 ஜுன் 30 வரை நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | சட்ட விரோத நிர்மாணங்கள் அகற்றுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் | பிரதான வருமான பரிசோதகரின் மூலம் அனுமதி பெற்று இந் நிர்மாணங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாகவும் எதிர்காலத்தில் பட்டியல் செலுத்துவதாக குறித்த வியாபாரி கூறியதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.<br>தற்காலிக வியாபாரக் கூடமொன்றை அமைத்துக் கொள்வதற்கான அனுமதியைப் பெறுவதற்கு அவ் வியாபாரி 2020 பெப்ரவரி 03ஆம் திகதி கடிதம் மூலம் விண்ணப்பித்துள்ளார். |

## 3.3 மனித வள முகாமைத்துவம்

### (அ) அங்கீகரிக்கப்பட்ட சேவைக்குறிப்பில்லாத ஆட்சேர்ப்பு

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 2012 டிசம்பர் 31 ஆம் திகதியில் தீ அணைப்புப் பிரிவின் 05 வெற்றிடங்கள் தொடர்பில் 36 ஊழியர்கள் அனுமதிக்கப்பட்டிருந்த போதும் இணைத்துக்கொள்ளல் வழிகாட்டிக் கோவையொன்று தயாரிக்கப்பட்டிருக்காமை காரணமாக இவர்கள் இணைத்துக் கொள்ளப்பட்டிருக்கவில்லை. வேறு சேவைகளில் நிரந்தர ஊழியர்கள் மற்றும் ஒப்பந்த, சமயோசித மற்றும் பதிலீட்டு அடிப்படையில் இணைத்துக் கொள்ளப்பட்ட 18 ஊழியர்களைப் பயன்படுத்தி இச் சேவை மேற்கொள்ளப்பட்டிருந்தது. | இணைத்துக்கொள்ளல் வழிகாட்டிக் கோவை அனுமதி பெறப்பட்டு முறையான நியமனங்கள் வழங்குவதற்கான நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | பயிற்றப்பட்ட ஒரு உத்தியோகத்தர்யின் கீழ் தீ அணைப்புப் பிரிவி ஒழுங்கமைக்கப்பட்டுள்ளதுடன் சேவைகள் ஆக்கபூர்வமான வகையில் வழங்கப்பட்டு வருகின்றன. பதவி வெற்றிடங்கள் எதிர்காலத்தில் பூர்த்தி செய்யப்படும். |

### (ஆ) ஊழியர் வெற்றிடங்கள மற்றும் மேலதிகம்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 2016 பெப்ரவரி 25ஆம் திகதிய 03/2016 இலக்க அரச நிர்வாக சுற்றறிக்கையின் விதிமுறைகளுக்கு முறனாக சபையின் தீர்மாணத்தின் அடிப்படையில் நாளாந்தம் ரூபா. 1,000, ரூபா. 1,200, ரூபா. 1,400 மற்றும் ரூபா. 2,000 ஆகிய கொடுப்பனவுகளின் மீதும் மாதாந்தம் ரூபா. 21,400, ரூபா. 40,000 மற்றும் ரூபா. 45,000 ஆகிய கொடுப்பனவுகளின் மீதும் அனுமதிக்கப்பட்ட பணிக் குழுவுக்கு மேலதிகமாக 2018 மற்றும் 2019 ஆண்டுகளில் ஒப்பந்த, சமயோசித மற்றும் பதிலீட்டு அடிப்படையில் இணைத்துக் கொள்ளப்பட்ட 180 ஊழியர்களுக்கு 2019ஆம் ஆண்டினுள் ரூபா. 56 மில்லியன் செலுத்தப்பட்டிருந்தது. இவ்வாறு இணைத்துக் கொள்ளப்பட்ட ஊழியர்களுக்கு போதியளவு வேலைகள் வழங்கப்பட்டிருக்கவில்லை. | சுற்றறிக்கையின் பிரமாணங்களின் அடிப்படையில் இணைத்துக் கொள்ளப்பட்டு கொடுப்பனவு வழங்க நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | நாளாந்த மற்றும் மாதாந்தக் கொடுப்பனவின் அடிப்படையில் இணைத்துக் கொள்ளப்பட்ட அனைத்து ஊழியர்களுக்குமான கொடுப்பனவுகள் சபையின் தீர்மாணத்தின் படியே மேற்கொள்ளப்பட்டன. |

**(இ) ஊழியர் கடன்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டின் இறுதியில் சேவையிலிருந்து இடைவிலகிய 03 உத்தியோகத்தர் களிடமிருந்து ரூபா. 61,374 உம், மரணித்த மற்றும் ஓய்வு பெற்ற 15 உத்தியோகத்தர் களிடமிருந்து ரூபா. 1,487,276 உம் இடமாற்றம் பெற்றுச் சென்ற 06 உத்தியோகத்தர்களிடமிருந்து ரூபா. 295,235 உம் கடன் நிலுவையாக அறவிடப்பட வேண்டியிருந்தது. | நிலுவைக் கடன் அறவிடப்படுவத ற்கான நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். | கடன் நிலுவைகளை அறவிடுவதற்குத் தேவையான நடவடிக்கைகள் ஆராயப்பட்டு வருகின்றன. |

## 3.4 முகாமைத்துவ வினைத்திறனின்மை

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | மாநகர சபையிடம் போதியளவு நிதி காணப்படுகையில் பஸ் தரிப்பிட கடைகளுக்காக விண்ணப்பித்தவர்களுக்கு அவற்றை அமைத்துக்கொள்வதற்கு சந்தர்ப்பம் வழங்கப்பட்டிருந்த போதும் அது தொடர்பாக எந்தவொரு ஒப்பந்தத்திலும் உள்வாங்கப்பட்டிருக்க வில்லை. | கடைகளின் நிர்மாணம் மற்றும் வாடகைக்கு விடல் ஆகியன சுற்றறிக்கை மற்றும் பெறுகைகள் விதிமுறைகளுக்கு அமைவாக நடைபெறல் வேண்டும். | இக் கடைகளை நிர்மாணிப்பதற்கு 2019ஆம் ஆண்டிற்கான வரவு வெலவுத் திட்டத்தில் நிதி ஒதுக்கப்படாமை மற்றும் ஒப்பந்தக் காரர்களினால் கடைகளை நிர்மாணிப்பதற்கான நிதி ஆற்றல் வெளிப்படுத்தப்பட்டமை காரணமாக இவ்வடிப்படைகளைக் கருத்திற் கொண்டு அவர்களுக்கு அவற்றை நிர்மாணிப்பதற்கான அனுமதி வழங்கப்பட்டது. கடைகளுக்கான ஒப்பந்தம் கைச்சாத்திடுவதற்காக SFC/34 இலக்கமும் 2019 செப்டம்பர் 19ஆம் திகதியும் கொண்ட நிதிக் குழுத் தீர்மாணத்தின் மூலம் அனுமதி பெறப்பட்டுள்ளதுடன் மாதாந்த வாடகைக் கட்டணம் பிரதான மதிப்பீட்டாளர்களின் மூலம் பெறப்பட்ட மதிப்பீடுகளின் அடிப்படையில் தீர்மாணிக்கப்பட்டது. |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | நகர அபிவிருத்தி அதிகார சபையின் அல்லது நகர சபை திட்டமிடல் குழுவின் அனுமதி பெறப்பட்டிருக்கவில்லை. | சபையின் அதிகாரப் பிரதேசத்தில் நிர்மாணங்களை மேற்கொள்வதுடன் தொடர்பான அனுமதிகளைப் பெற்றுக்கொள்வதற்கான நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். | கடைகளின் நிர்மாணப் பணிகள் நகரப் பொறியியலாளரால் தயாரிக்கப்பட்டு அனுமதிக்கப்பட்ட திட்டத்தின் அடிப்படையில் மேற்கொள்ளப்பட்டன. அத் திட்டம் தொடர்பாக G.C.(30) 2019.02.12 திகதிய சபை அங்கீகாரத்திலும் உள்ளடக்கப்பட்டிருந்ததுடன் கௌரவ ஆளுனர் அவர்களின் நேரடி அனுமதியுடன் கூடிய கடிதம் மூலமும் அனுமதி கிடைத்துள்ளது. |

## 3.5 சர்ச்சைக்குரிய தன்மையிலான கொடுக்கல் வாங்கல்கள்

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | வடமத்திய மாகாணத்தின் அனைத்து உள்ளூராட்சி மன்றங்களினதும் அங்கத்தவர்களுக்காக தொடர்பாடல் கொடுப்பனவாக மாதாந்தம் ரூபா. 3,000 உள்ளூராட்சி மன்ற நிதியத்தின் மூலம் செலுத்துவதற்கு அமைச்சரவையின் அனுமதி பெறப்பட்டிருந்து, அதற்கமைய குறித்த கொடுப்பனவு மேற்கொள்ளப்பட்டிருந்த போது பிரதி நகர முதல்வர் உட்பட நகர மக்கள் பிரதிநிதிகளின் தொலைபேசி கட்டணங்களைச் செலுத்துவதற்காகவும் 2018ஆம் ஆண்டு மே மாதம் தொடக்கம் டிசம்பர் வரை ரூபா. 214,115 மற்றும் 2019 ஆம் ஆண்டு ஜனவரி தொடக்கம் டிசம்பர் வரை ரூபா. 595,503 உம் செலுத்தப்பட்டிருந்தது. | ஒரே செலவுக்காக சபை நிதியிலிருந்து 02 வவுச்சர்கள் மூலம் கொடுப்பனவு மேற்கொள்ளப்படல் கூடாது. | மாநகர சபை கட்டளைச் சட்டத்தின் இல 188(பப) இற்கமைவாக சபை அங்கத்தவர்களுக்கான தொலைபேசிக் கட்டணத்துக்காக ஒதுக்கப்பட்டுள்ள நிதி மற்றும் 2015 மார்ச் 15 ஆம் திகதிய மா.ச.6(37) இலக்க சபையின் அங்கீகாரம் ஆகியவற்றைக் கருத்தில் கொண்டு மாதாந்தம் ரூபா. 5,000 மற்றும் ரூபா. 3,000 அடிப்படையில் தொலைபேசி மற்றும் தொடர்பாடல் கொடுப்பனவு வழங்கப்பட்டுள்ளது. |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | பஸ் தரிப்பிடத்தில் நிர்மாணிக்கப்பட்ட புதிய கடைகளை கையளிக்கும் ஒப்பந்தத்தின் நிபந்தனைகளின் பிரகாரம் வாடகைக்காகப் பெற்ற தரப்பினர் மூலம் கைமாற்றல், விற்றல் அல்லது மீள் வாடகைக்கு விடல் ஆகியன மேற்கொள்ளப்பட முடியாத போதும், குறைந்த மாத வாடகை ரூபா. 17,250, ரூபா. 17,250, ரூபா. 25,000 மற்றும் ரூபா. 24,000 அடிப்படையில் 04 கடைகள் கூடுதல் பெறுமதியின் மீது உப வாடகைக்கு வழங்கப்பட்டிருந்தன. | வாடகை ஒப்பந்த நிபந்தனைகளை மீறல் தொடர்பாக ஒப்பந்தத்தின் அடிப்படையில் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | கையளிக்கும் ஒப்பந்தத்தின் பிரகாரம் அரச மதிப்பீட்டாளரின் மதிப்பீட்டின் அடிப்படையில் வாடகைதாரர்களுக்கு வாடகைக்கு விடப்பட்டிருந்த போதும் உப வாடகைக்கு விடல் நடைபெற்றுள்ளதா என்பது தொடர்பாக வருமான பரிசோதகர்களால் பரிசோதிக்கப்பட்டு கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கின்றேன். |

## 3.6 சொத்து முகாமைத்துவம்

### பயன்பாடற்ற மற்றும் குறை பயன்பாடுடைய சொத்துக்கள்

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | 2014 ஆம் ஆண்டு வெளி நிறுவனமொன்றின் ரூபா. 3,050,000 நிதி ஒதுக்கீட்டில் மாநகர சபை சந்தை வளாகத்தில் 70 கன மீற்றர் கொள்ளளவுடைய உயிர் வாயுத் தொகுதியொன்று நிர்மாணிக்கப்பட்டிருந்த போதும் அதன் பலன்களைப் பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படாததன் காரணமாக தற்பொழுது அது பயன்பாடற்றுக் காணப்படுகின்றது. | சொத்துக்களின் பிரயோசனத்தைப் பெறுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | உயிர் வாயுத் தொகுதியின் 02 தாங்கிகள் நிர்மாணிக்கப் பட்டுள்ளதுடன் ஒரு தாங்கி பழுதடைந்துள்ளதுடன் காரணமாக உற்பத்தி செய்யப்படும் வாயுவை களஞ்சியப்படுத்தி வைப்பது சிரமமாகியுள்ளது. அதனை புனர் நிர்மாணம் செய்து பயன்படுத்த திட்டமிடப்பட்டுள்ளது. |
| (ஆ) | மத்திய சுற்றாடல் அதிகார சபையின் நிதி ஒதுக்கீட்டில் ரூபா. 80 லட்சம் செலவில் பயன்படுத்தப்பட்ட பிளாஸ்டிக் பொருட்களை மீள் சுழற்சி செய்யும் திட்டமொன்று ஆரம்பிக்கப்பட்டு 2012ஆம் ஆண்டு பிளாஸ்டிக்கினை துண்டுகளாக வெட்டுவதற்கும் மற்றும் பிளாஸ்டிக் வெப்பமாக்குவதற்கான 02 | சொத்துக்களின் பிரயோசனத்தைப் பெறுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | பிளாஸ்டிக் மீள் சுழற்சி நிலையத்திற்குக் கிடைக்கின்ற பிளாஸ்டிக் பொருட்களை விற்பனை செய்வதன் மூலம் கிடைக்கும் வருமானம், இயந்திரத்தைப் பயன்படுத்தி பிளாஸ்டிக் உற்பத்திகளை (துண்டுகளாக்கி) விற்பனை செய்வதன் |

| | | |
|---|---|---|
| இயந்திரங்களும் பொருத்தப்பட்டிருந்தன. அவ்வியந்திரங்கள் 2014 ஆம் ஆண்டளவில் செயலிழந்திருந்ததுடன் மீண்டும் திருத்தியமைக்கப்பட்டிருந்தும் திட்டத்தினை முன்னெடுப்பதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | | மூலம் பெறுகின்ற வருமானத்தை விடவும் அதிகமானதாகும். எனவே, இயந்திரத்தைப் பயன்படுத்தி பிளாஸ்டிக் உற்பத்தி செய்வது ஆரோக்கியமற்ற ஒரு செயலாகும். |

**3.7 சிக்கனமற்ற கொடுக்கல் வாங்கல்கள்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 2018 டிசம்பர் 07ஆம் திகதிய மற்றும் 2015 செப்டம்பர் 25ஆம் திகதிய சனாதிபதி செயலாளரின் சுற்றறிக்கையின் பிரகாரம் நிறுவனங்களில் நடாத்தப்பட வேண்டிய உள்ளக நிகழ்ச்சிகளை குறைந்த செலவில் நடாத்துவதற்கு ஒழுங்கு செய்யப்படல் வேண்டுமெனக் குறிப்பிடப்பட்டிருந்த போதும், அதற்கு முறனாக 2018 டிசம்பர் மாதத்தில் அஹுங்கல்ல பிரதேசத்தில் அமைந்துள்ள ஹோட்டல் ஒன்றில் ஒரு செயலமர்வு நடாத்தப்பட்டு ரூபா. 490,690 செலவிடப்பட்டிருந்தது. மேலும் முறையான பெறுகை வழிகாட்டலொன்று இல்லாமல் இடம் தெரிவு செய்யப்பட்டிருந்தது | குறைந்த செலவின் கீழ் பொது மக்கள் நிதி செவிடப்படல் வேண்டும். | நகர அபிவிருத்தி அதிகார சபைச் சட்டத்தின் திருத்தங்களுக்கு அமைவாக வழங்கப்பட்டுள்ள பிரமாணங்களுக்கும் மற்றும் தேசிய பௌதிக திட்டமிடல் கொள்கைக்கு அமைவாகவும் குருணாகல் நகர அபிவிருத்தி தொடர்பாக கலந்தாலோசிப்பதற்காக (பயிற்சி செயலமர்வாக) நகர சபை உறுப்பினர்களின் ஆலோசனையின் அடிப்படையில் ஒரு செயலமர்வு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. இதற்காக நகரத்திற்கு வெளியில் அமைந்துள்ள, அமைதியான, தங்குமிட வசதி கொண்ட ஒரு இடம் மிகவும் பொருத்தமானது எனவும், இதற்கான செலவுகளை சபை நிதியத்திலிருந்து மேற்கொள்வது பொருத்தமானதெனவும் எடுக்கப்பட்ட GC-5(ii) இலக்க 2018.12.04ஆம் திகதிய சபை அங்கீகாரத்தின் பேரில் இப் பயிற்சி செயலமர்வுக்கான அனுமதி வழங்கப்பட்டது. |

**3.8 பெறுகைகள்**

**3.8.1 ஒப்பந்த நிர்வாகம்**

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | இலுப்புகெதர வீதி நீர்க் குழாய் பொருத்தும் திட்டத்தின் வேலைத் தலைப்பு இலக்கம் 02 இன் கீழ் பீவீசீ குழாய்களுக்கு மேல் ஆற்று மணல் இடுவதற்காக ரூபா. 612,779 செலுத்தப்பட்டிருந்த போதும், பௌதீக பரிசோதனையின் போது ஆற்று மணல் இடப்படாத மற்றும் ஆற்று மணல் ஒரு அங்குல உயரத்திற்கு இடப்பட்ட இடங்கள் காணப்பட்டன. இதனடிப்படையில் நிறை வேற்றப்படாத வேலை களுக்காக ரூபா. 510,649 மேலதிகமாக செலுத்தப்பட்டிருந்தது. | நிறைவேற்றப்படாத வேலைகளுக்காக மேற்கொள்ளப்பட்ட கொடுப்பனவுகள் மீள அறவிடப்படல் வேண்டும். | ஒப்பந்தக்காரரினால் 78 கன மீற்றர் அளவான மணல் வேலைத்தளத்திற்கு வினியோகிக்கப்பட்டதுடன், அவை வாகன அளவீடாகப் பெறப்பட்டன. இந்த மணல் அனைத்தும் காணின் அடியில் சுமார் 37.5 மில்லிமீற்றரும் அதற்கு மேலால் பொருத்தப்பட்ட குழாய்களினால் மூடப்பட்டுள்ளதுடன் குழாய்க்கு மேலால் சிறிய ஒரு மணல் படையே காணின் உயரம் மற்றும் அகலம் மாற்றடைகின்ற இடங்களின் தன்மைக்கேற்ப வித்தியாசமாகத் தென்பட்ட போதும், அவற்றுக்கேற்ப தேவை பூர்த்தி செய்யப்பட்டு, கொண்டுவரப்பட்ட மணல் அனைத்தும் நகரப் பொறியிலாளரின் (நீர்) அறிவுறுத்தல் மற்றும் தொழில்நுட்ப உத்தியோகத்தர்யின் மேற்பார்வையின் கீழ் பயன்படுத்தப்பட்டது. |
| (ஆ) | இலுப்புகெதர வீதி நீர்க் குழாய் பொருத்தும் முதலாவது திட்டத்தினைப் பூர்த்தி செய்ததன் பின்னர் பாதையில் இறக்கம் ஏற்பட்டமை காரணமாக காபட் இடுவதற்காக நீர்க் குழாய் பொருத்தப்பட்ட காண்களைத் தோண்டி மண்ணை அகற்றி மூடுவதற்கு ரூபா. 4,000,000 இற்கான புதிய மதிப்பீடு தயாரிக்கப்பட்டிருந்தது. இப் | பொது மக்களின் நிதியை சிக்கனமாகவும், பிரயோசனமாகவும் பயனுள்ள விதத்திலும் செலவிடுவதற்கான நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். | வேலைகளை ஆரம்பிக்கும் போது மாநகர சபை விதிமுறைகளுக்கு அமைவாக மதிப்பீடு தயாரிக்கப்பட்டு, பரிசீலிக்கப்பட்டு, வேலைக் குழு மற்றும் நிதிக் குழுக்களிடம் அனுப்பப்பட்டு மாநகர சபையின் அனுமதி கிடைக்கப் பெற்றதன் பின்னர் பெறுகைகள் |

| | | | |
|---|---|---|---|
| | பாதைக்கு காபட் இடப்படுவதை சபை அறிந்திருந்த நிலையில் நீர்க் குழாய் பொருத்துவதற்காக ஒரே வேலைத் தலைப்புக்காக 02 மதிப்பீடுகள் தயாரிக்கப்பட்டு கொடுப்பனவு மேற்கொள்ளப்பட்டிருந்தமை காரணமாக முதல் மதிப்பீட்டில் 03 விடயங்களுக்காக மேற்கொள்ளப்பட்ட ரூபா. 1,208,305 செலவு சபையின் கவனயீனம் காரணமாக ஏற்பட்ட செலவினமாகும். | | பிரிவுக்கு வழங்கப்பட்டு, பெறுகை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு, தேவையேற்படின் மீண்டும் மீண்டும் பெறுகை நடவடிக்கைகளை மேற்கொண்டு ஒப்பந்தக்காரர் தெரிவு செய்யப்பட்டு, ஒப்பந்தம் கைச்சாத்திடுவதற்கான காலம் செலவாவதன் காரணமாக இது ஏற்பட்டுள்ளது. |
| (இ) | புபுது மாவத்தையின் 2 ஆவது ஒழுங்கையின் காண் அமைத்து தார் இட்டு புனர் நிர்மாணம் செய்வதற்காக ரூபா. 1,574,243 இற்கு ஒப்பந்தம் கைச்சாத்திட்டிருந்த போதும், வேலைத் தலைப்பு இலக்கம் 11 தொடக்கம் 16 வரையான ரூபா. 679,457 இற்கான காண் அமைத்தல் மேற்கொள்ளப்படாதிருந்ததுடன் பாதைக்கான தார் இடுதல் மாத்திரம் மேற்கொள்ளப்பட்டிருந்தது. தார் இடப்பட்ட சில இடங்களில் தார் கழன்று கல் வெளியாகும் நிலை ஏற்பட்டிருந்தது. | மதிப்பீட்டின் பிரகாரம் ஒப்பந்தங்களை நடைமுறைப்படுத்து வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | ஒப்பந்தக்காரர் குறித்த வேலையினை நிறைவு செய்ததன் பின்னர் எமது நீர்த் திட்டத்தின் மூலம் பாதை மீண்டும் பழுதாக்கப்பட்டுள்ளதுடன், அதன் மூலம் ஏற்பட்டுள்ள பாதிப்பினை மீண்டும் சீர் செய்து தருமாறு குறித்த நீர் திட்டத்தினை மேற்கொண்ட உத்தியோகத்தர்கள் வேண்டப்பட்டுள்ளனர். நிறுத்தி வைக்கப்பட்ட கொடுப்பனவு இன்னும் வழங்கப்படவில்லை. |

## 4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 4.1 நிதிக் கூற்று சமர்ப்பிக்கப்படாமை

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 2019 ஆம் ஆண்டின் வருடாந்த நிதிக் கூற்றுக்கள் 2020 மே 12 ஆம் திகதி கணக்காய்விற்காகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. | நிதிக் கூற்றினை குறித்த தினத்தில் சமர்ப்பிக்க நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | நாட்டில் ஏற்பட்டுள்ள கொவிட் 19 தொற்று நிலைமை காரணமாக காரியாலய உத்தியோகத்தர் ஒருவரின் கடமை தொடர்பில் மந்த நிலை ஏறட்பட்டிருந்த போதும், 2021 ஆம் ஆண்டிற்கான குறித்த காலப்பகுதியினுள் வருடாந்த நிதிக் கூற்றுக்களை சமர்ப்பிப்பதற்காக குறித்த தரப்பினருக்கு அறிவுறுத்தல் வழங்கியுள்ளேன். |

## 4.2 உள்ளகக் கணக்காய்வு

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| சபையினுள் இரணடு உத்தியோகத்தர்களைக் கொண்ட உள்ளகக் கணக்காய்வுக் குழுவொன்று அமைக்கப்பட்டிருந்த போதும், உள்ளகக் கணக்காய்வுத் திட்டத்தினை பிரதான கணக்காளருக்கு சமர்ப்பிப்பதற்கான நடவடிக்கை எடுக்கப் பட்டிருக்கவில்லை. அனைத்துத் துறைகளும் உள்ளடங்கும் வகையில் கணக்காய்வு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படாதிருந்ததுடன் உள்ளக நிர்வாத் தொகுதி வெற்றிகரமாக மதிப்பீட்டிற்கு உள்ளடக்கப் பட்டிருக்கவில்லை. | சுற்றறிக்கை பிரமாணங்களுக்கு அமைவாக உள்ளக கணக்காய்வுப் பிரிவு செயற்படல் வேண்டும். | உள்ளகக் கணக்காய்வுத் திட்டத்தின் அடிப்படையில் சபையில் பல துறைகள் உள்ளடங்கும் வகையில் 12 உள்ளகக் கணக்காய்வு அறிக்கைகள் இதுவரையில் வெளியிடப்பட்டுள்ளன. |

## 4.3 பதில் அளிக்கப்படாத கணக்காய்வுப் விசாரணைகள்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| ஒரு கணக்காய்வுப் விசாரணைக்கான பதில் வழங்கப்பட்டிருக்கவில்லை. | கணக்காய்வுப் விசாரணைக்கான பதில் வழங்கப்படுவதற்கான நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். | வரைவு வினாவிக்கான பதில் அளிக்கப்பட்டுள்ளது. |